**சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி**

மனு எண். எம்.சி.ஓ.பி. 56/2022

PW - 2

2026 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 30 ம் நாள் வெள்ளிக்கிழமை (1989 ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி) திரு.எம்.மணிகண்டன், எம்.ஏ., எம்.எல்., சார்பு நீதிபதி, பொள்ளாச்சி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | கணேசன் |
| த.பெ. | சண்முகம் |
| வயது | 62 |
| முகவரி | பொள்ளாச்சி |

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நான் சத்தியப்பிரமாணமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

மசாஆ - 9 எனது ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்படுகிறது)

**குறுக்கு விசாரணை**

நான் என்ன வேலை செய்து வருகிறேன் என கேட்டால் பழைய இரும்பு கடை வைத்து நடத்தி வருகிறேன். நான் பழைய இரும்பு கடை நடத்தி வருவதற்கு ஆதாரம் நீதிமன்றத்தில் உரிமைத்தையும், கடை நடத்தி வருவதற்கு உண்டான வரி

விவரத்தை பொறுத்து ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் எங்கு கடை வைத்துள்ளேன் என கேட்டால் நான் வாரச் சந்தைக்குள் பழைய இரும்பு கடை வைத்துள்ளேன், அதற்கு எவ்வளவு வாடகை செலுத்தி வருகிறேன் என கேட்டால் நகராட்சிக்கு மாதத்திற்கு 150 ரூபாய் செலுத்தி வருகிறேன், அதனை நீதிமன்றத்தில் தாக்கல செய்துள்ளேன் என்றால் இல்லை. காயம் பட்ட நபர் லோடிங் மேனாக என்னிடம் வேலை பார்த்ததாக சொல்லும் நிலையில் எத்தனை பேரை வைத்திருந்தேன் என கேட்டால் மனுதாரர் செல்வராஜ் மற்றும் ரமேஷ் என்ற இரு நபர்கள் என்னிடம் வேலை பார்க்கிறார்கள். என்னிடம் வண்டி, வாகனம் உள்ளதா என்றால் இல்லை. என்னிடம் கடையில் லோடு ஏற்றுவதற்கும், இறக்குவதற்கும் மனுதாரர் வேலை செய்து வருகிறார். நான் மனுதாரர் லோடிங் மேன் என சொல்லி கார்டு ஏதேனும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. மனுதாரருக்கு அரசில் லோடிங் மேன் என்பதற்கு ஏதேனும் தொகை செலுத்தி வருகிறேனா என்றால் இல்லை. நான் மனுதாரர் வேலை செய்து வருவதை பொறுத்து ஆவணம் பராமரித்து வருகிறேனா என்றால் இல்லை. வருமான வரி செலுத்தி வருகிறேனா என்றால் செலுத்தி வருகிறேன். அதில் மனுதாரருக்கு கொடுத்த சம்பளத்தை காட்டியுள்ளேனா என்றால் இல்லை. மனுதாரர் என்னிடம் வேலை செய்யவில்லை என்றும், நான் மனுதாரர் அதிக இழப்பீடு பெற வேண்டி அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி